**MCOP NO: 2139/2024** **DATE: 02.06.2026**

ம.சா : 1

பெயர் : திரு. தரணி

த/பெ : திரு. பஞ்சாட்சரம்

வயது : 45

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 02.06.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 8 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது 24.02.2024 ல் நடந்தது. என் மீது மோதிய வாகனம் இருசக்கர வாகனமாகும். நான் என் வேலையை முடித்துவிட்டு நடந்து சென்று கொண்டிருந்த போது தான் எனக்கு விபத்து ஏற்பட்டது. நான் நடந்து சென்ற சாலையில் சிக்னல் இல்லை. என் மீது மோதியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. விபத்து ஏற்பட்டவுடன் நான் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து அங்கு ஒரு நாள் சிகிச்சை பெற்ற பின்னிட்டு மறு நாளே அந்த மருத்துவமனையிலிருந்து வந்துவிட்டேன். பின்னிட்டு நான் எனது சிகிச்சைக்கு புத்தூர் கட்டு மூலமாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மசாஆ 6 ஆக தாக்கல் செய்துள்ளேன். விபத்து நடந்த இடத்திற்கு நேரடியாக போலீசார் வந்துவிட்டனர். விபத்தினால் எனக்கு வலது பக்க இடுப்பு ஜாயிண்டில் உள்ள எலும்பில் காயம் ஏற்பட்டது. எனது பிரமாண பத்திரிக்கை பத்தி 3 ல் சொல்லியுள்ள தொழிலிற்கும், வருமானத்திற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. விபத்தினால் எனக்கு சொற்ப காயங்கள் என்றும், அவை முழுமையாக குணமடைந்து விட்டது என்றாலும் சரியல்ல. விபத்தானது முழுக்க முழுக்க 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனகுறைவால் ஏற்பட்டதால் நான் அவரிடம் இருந்து தான் இழப்பீடு பெற வேண்டும் என்றால் சரியல்ல. கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.